<u>2026 ஜனவரி மாதம் 30– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>O.S. நெம்பர் : 58/2016</u>

O.S. No.: 58/2016 – போஜு DW4 30.01.2026

த/பெ.சௌரி செட்டியார்

<u>சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. எனது சொந்த ஊர் எந்த ஊர் என்றால் பழனிசெட்டிபட்டி ஆகும். எனக்கு எவ்வளவு ஆண்டுகாலமாக வாதி, பிரதிவாதிகளை தெரியும் என்றால் கடந்த 40 ஆண்டுகளாக தெரியும். வழக்கு விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நன்கு தெரியும். என்ன வழக்கு என்றால் பேரனுக்கு எழுதிவைத்த உயில் வழக்கு ஆகும். எனது சாட்சியத்தில் 08.06.1972ம் தேதியில் ஒரு சொத்தை கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ள வீடு யார் யாருக்கு பாத்தியம் என்றால் சீனிவாசனுக்கு பாதி பங்கு, அவரது தம்பி மற்றொரு பாதி பங்கு ஆகும். அவர்களுக்கு பூர்வீகப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. பாகப்பிரிவினை பத்திரம் தெரியும் என்று நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் வீடு, தோட்டம், எஸ்டேட் பற்றிய விபரங்கள் மட்டும் தெரியும். எந்த சொத்துக்கள் குறித்து பேரனுக்கு உயில் எழுதப்பட்டது என்றால் வீடு, தோட்டம், எஸ்டேட் ஆகும். மேற்சொன்ன மூன்று சொத்துக்களுமே சீனிவாசனின் பூர்வீகச் சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்குப் பற்றிய முழு விபரம் எனக்கு தெரியாது என்றாலும், பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.01.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.01.30 18:55:19 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
30.01.2026.